## வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ். இடையே 2-வது நாளாக

# மெட்ரோ ரெயில் வழித்தடத்தில் பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு

சென்னை, ஜன.21-
வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். மெட்ரோ ரெயில் நிலைய வழித்தடத்தில் கடந்த 2 நாட்களாக பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு செய்தார். அந்த ரெயில் நிலையங்களுக்கு இடையே 80 கிலோ மீட்டர் வேகத்தில் மெட்ரோ ரெயிலை இயக்கி பாதுகாப்பு கமிஷனர் இன்று (திங்கட்கிழமை) பரிசோதிக்கிறார்.



சென்னை சென்டிரல் மெட்ரோ சுரங்க ரெயில் நிலையத்தில் பாதுகாப்பு கமிஷனர் கே.ஏ.மனோகரன் ஆய்வு செய்த போது எடுத்தபடம்.

### பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு

சென்னை வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ்.இடையே 10 கிலோ மீட்டர் தூரம் கொண்ட மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதையில் கடந்த 19-ந்தேதி மெட்ரோ ரெயில் பாதுகாப்பு ஆணையர் கே. ஏ.மனோகரன் வண்ணாரப்பேட்டையில் இருந்து சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையம் வரை ஆய்வு செய்து முடித்தார்.

தொடர்ந்து 2-வது நாளாக நேற்று சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து டி.எம்.எஸ். வரை பாதுகாப்பு ஆணையர் டிராலியில் சென்று ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது சென்டிரல் மெட்ரோ நிலையம், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி, ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டன. தொடர்ந்து சுரங்கத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள மின்சார கட்டமைப்புகள், பாதுகாப்பு வசதிகள், சிக்னல்கள் செயல்படும் விதம், தீயணைப்பு கருவிகள் செயல்படும் விதம் குறித்து ஆய்வு செய்யப்பட்டன.

### சென்டிரல் ரெயில் நிலையம்

அதைத்தொடர்ந்து சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் 240 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 அடுக்கு ரெயில் நிலையத்தை பேட்டரி காரில் சென்று பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு செய்தார்.

இந்த ரெயில் நிலையம் தரை தளத்தில் இருந்து 90 அடி ஆழத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து அரசினர் தோட்டம் வரை செல்லும் ரெயில் பாதையில் கூவம் ஆற்றுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள ரெயில் பாதையில் பயணிகளுக்கு செய்து தரப்பட்டுள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்து கமிஷனர் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன பொறியாளர்கள் உடனிருந்தனர். கமிஷனர் இந்த ஆய்வின் போது பல்வேறு சந்தேகங்களை எழுப்பினார். அவற்றுக்கான பதில்களை பொறியாளர்கள் அளித்தனர்.

### 80 கி.மீ வேகத்தில் இயக்கி ஆய்வு

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

வண்ணாரப்பேட்டை- டி. எம்.எஸ். இடையே பாதுகாப்பு கமிஷனர் 2 நாட்கள் ஆய்வு செய்து முடித்து உள்ளார். தொடர்ந்து 3-வது நாளான இன்று (திங்கட்கிழமை) வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ். வரை 80 கிலோ மீட்டர் வேகத்தில் மெட்ரோ ரெயில் ஓட்டி ஆய்வு செய்யப்படுகிறது.

இந்த ஆய்வை தொடர்ந்து பாதுகாப்பு ஆணையர் சான்றிதழ் அளிப்பார். அதனை தொடர்ந்து பயணிகள் ரெயில் இயக்குவதற்கான தேதி குறிப்பிடப்படும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.